# தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும், அவற்றின் விளைவுகளும் - கல்லடி பிரதேத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

பு. டயசியா

*சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*
dayasiyapuviraj@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:** தற்காலச் சமூகங்களின் சமூகக் கட்டமைப்பானது "E-society" என அழைக்கப்படுமளவு இணையத்துடனும், சமூக ஊடகங்களுடனும் பின்னிப்பிணைந்ததாக உள்ளது. ஏனெனில் இன்றைய நவீன தொழில்நுட்ப சூழலில் மக்கள் வாழ்க்கை நடைமுறைகள் அனைத்தும் சமூக ஊடகங்களை சார்ந்ததாகவே அமைந்துள்ளன. சமூக ஊடகங்கள் என்பது மக்கள் இயங்கலை (Online) மூலம் ஒருவரோடு ஒருவர் இடைவினை கொள்வதற்கு பயன்படுத்தும் ஊடகங்களாகும். எனினும் இன்று சமூக ஊடகங்களின் பாவனையானது வளர்ந்தவர்களால் மட்டுமன்றி சிறுவர்கள் என மதிக்கப்படும் 18 வயதிற்கு குறைந்த பாடசாலை மாணவர்களால் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவது வருத்தத்திற்குரிய விடயமாகும். அந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்திலும் சமூக ஊடகங்கள் பாடசாலை மாணவர்களாலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதை மையமாகக் கொண்ட வகையில் "தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும், அவற்றின் விளைவுகளும்" எனும் தலைப்பின் கீழாக கல்லடி பிரதேசத்தை மையமாகக் கொண்டதாகவே இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வில் வரையறைக்குட்பட்ட வகையில் தரம் 10, 11, 12 மாணவர்களின் சமூக ஊடகங்களின் பாவனையே கருத்திற்கொள்ளப்படுகின்றது. சமூக ஊடகங்களை மாணவர்கள் எதற்காக பயன்படுத்துகின்றனர், பயன்படுத்துவதன் முழுமையான நோக்கம் என்ன, சமூக ஊடகங்களை பாவிப்பதால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் மற்றும் சமூக ஊடகங்களை பாவிக்கும் மாணவர்களின் கல்வி நிலை, பெற்றோர்கள், பிரதேசவாசிகள், ஆசிரியர்கள் போன்றோரின் கருத்துக்கள் இவ்வாய்வில் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. அவ்வகையில் வினாக்கொத்து முறை, பேட்டிமுறை, கலந்துரையாடல் மூலம் முதலாம் நிலைத்தரவுகளும், கிராம சேவகர் அறிக்கை, பாடசாலை அறிக்கைகள், புள்ளிவிபரங்கள் மூலம் இரண்டாம் நிலைத்தரவுகளும் திரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்காக அமெரிக்க உளவியலாளர் மாஸ்லோவின் "தேவைக்கோட்பாடு" பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு ஆய்வினோடு தொடர்புடைய மாறிகளான பாடசாலை மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் தரவுகள் திரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் இன்று சமூக ஊடகங்களாது 51% மாணவர்களால் பயன்படுத்தப்படுவது ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளப்பட்டது. சமூக ஊடகங்களான முகப்புத்தகம், வட்ஸ் அப், இன்ஸ்டகிராம், யுடியுப், ஸ்கைப், வைபர் ஆகியன பரவலாக மாணவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் மத்தியில் கல்வியில் மந்தகதி, ஞாபக மறதி, தனிமைப்படுத்தப்படுதல், சமூக ஊடகங்களால் அதிகமாக உள்ளீர்க்கப்படுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிய முடிந்தது.

**திறவுச்சொற்கள்:** சமூக ஊடகங்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், விளைவுகள்

## 1. ஆய்வு அறிமுகம்

இன்றைய அறிவியல் உலகம் தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களின் மூலம் மிக உன்னதமான பிணைப்பை உலக மக்களிடையே எளிமையாக்கி விட்டது. அத்தோடு அறிவியல் கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றும் மானிட நாகரிகத்தையும், வாழும் முறைகளையும் மாற்றியமைத்திருக்கின்றன. ஆரம்ப காலத்தில் முழக்கம், தீ போன்றவற்றைப் பயன்படுத்தி தொலைவில் இருக்கும் மக்களுக்கு தகவல் அனுப்பினான். பின்பு நாகரிகம் வளர்ச்சியடைந்து புறா மூலம் தகவல் பரிமாறினான். பின்னர் தபாலில் தொடர்பு கொள்ள ஆரம்பித்தான். இதன் பின்னர் கணினியின் கண்டுபிடிப்பு காரணமாக இணையம் மூலமாக உலகில் எந்த ஒரு மூலையிலும் உள்ளவர்களுக்கும் தகவலை அனுப்பலாம் என இன்றைய நவீன விஞ்ஞானம் உணர்த்துகின்றது.



ISBN 978-955-627-120-1

சமூகம் என்பது ''ஒருவருடன் ஒருவர் கலந்து, இணைந்து எல்லோருக்கும் பொதுவான சில நோக்கங்களை அடைவதற்காக கூடி செயற்படும் பல மனிதர்களின் கூட்டே ஆகும்'' என கிட்டிங்ஸ் (Giddings) கூறுகின்றார். இவ்வாறு இருக்கும் சமூக விலங்கான மனிதன் பாதுகாப்பு, புதிய அனுபவங்களைப் பெறல், பிறரது தூண்டல்களுக்கேற்ப நடத்தல், பிறரைத் தம்மைப் போல் ஒருவராக ஏற்றுக் கொள்ளல் ஆகிய நான்கு ஊக்கிகளே சமூகத் தொடர்புகளுக்கு அடிப்படை என தோமஸ் எனும் அறிஞர் கூறுகிறார். இத் தொடர்புகளை மேற்கொள்வதற்காக மக்கள் இன்று இணையத்தினைப் பயன்படுத்துகின்றனர். அமெரிக்க உளவியலாளர் மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டின்படி ''சமூக மதிப்பீட்டிற்காக மக்கள் சமூக ஊடகங்களைச் சார்ந்திருக்கின்றனர்'' என்று கூறுகின்றார்.

இதனை நோக்கமாக கொண்டே ''தற்காலத்தில் மாணவர்களிடம் அதிகரித்துக் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும், அவற்றின் விளைவுகளும்'' என்ற தலைப்பின் கீழ் தரம் 10, 11, 12இல் கல்வி பயிலும் கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களை மையப்படுத்தியதாக இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வின் நோக்கமானது சமூக ஊடகங்களின் பாவனையானது தரம் 10, 11, 12 மாணவர்களிடையே காணப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதாகும்.

உபநோக்கங்களாக

- மாணவர்களுக்கு எவ்வாறான உடல், உள, சமூகப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது என அறிதல்.
- மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் பாவனையின் வீதத்தை அறிதல்.
- பெற்றோர்கள், ஆசிரியர்களின் சமூக ஊடகங்கள் மீதான பார்வையை அறிதல்.

என்பன அமைகின்றன.

## 3. ஆய்வுப் பிரச்சினைகள்.

இன்று நவீனத்துவம் என்பதை உள்வாங்கிக் கொண்ட எமது சமூகங்கள் மிக வேகமாக முன்னேறிக் கொண்டு வருகின்றன. மேற்கத்தைய நாடுகளால் பின்பற்றப்பட்ட பல விடயங்களும் இன்று ஆசியா, ஆபிரிக்கா உட்பட ஏனைய நாடுகளிலும் பின்பற்றப்படுவது உண்மை. ஆரம்பத்தில் ஒரு சிலரால் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த முகப்புத்தகம், ஸ்கைப், டுவிட்டர், வைபர், யுடியுப் போன்ற பல சமூக ஊடகங்களை இளைஞர்கள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களும் அதிகளவு பயன்படுத்துகின்றனர். இப்பாவனை கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 10, 11, 12 பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் உடல், உள, சமூக, பண்பாட்டு ரீதியான பாதகமான பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது

சமூக ஊடகங்களின் அதிகளவு பாவனையால் கல்வியில் நாட்டமின்மை, சமூகச் சீர்கேடு, தவறான நண்பர்களின் உறவு, பாலியல் ரீதியான துாண்டுதல், தனிமைப்படுத்தப்படுதல் ஏற்படுகின்றனவா போன்ற பல விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.



ISBN 978-955-627-120-1

## 4. ஆய்வு முறைமையியல்

''தற்காலத்தில் மாணவர்களிடம் அதிகரித்துக் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும், அவற்றின் விளைவுகளும்'' எனும் தலைப்பின் கீழாக கல்லடி பிரதேசத்தை மையமாகக் கொண்டதாகவே இந்த ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வில் தரம் 10, 11, 12 மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனையே கருத்திற்கொள்ளப்படுகின்றது. சமூக ஊடகங்களை மாணவர்கள் எதற்காக பயன்படுத்துகின்றனர், பயன்படுத்துவதன் முழுமையான நோக்கம் என்ன, சமூக ஊடகங்களை பாவிப்பதால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் மற்றும் சமூக ஊடகங்களை பாவிக்கும் மாணவர்களின் கல்வி நிலை, பெற்றோர்கள், பிரதேசவாசிகள், ஆசிரியர்கள் போன்றோரின் கருத்துக்கள் இவ்வாய்வில் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

அவ்வகையில் வினாக்கொத்து முறை, பேட்டிமுறை, கலந்துரையாடல் மூலம் முதலாம் நிலைத்தரவுகளும், கிராம சேவகர் அறிக்கை, பாடசாலை அறிக்கைகள், புள்ளிவிபரங்கள் மூலம் இரண்டாம் நிலத்தரவுகளும் திரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வினோடு தொடர்புடைய மாறிகளான பாடசாலை மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் பல தரவுகள் திரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5. தரவுப்பகுப்பாய்வும், கலந்துரையாடலும்

தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக இலங்கையிலும் இன்று வலைத்தளப்பாவனையானது வெகுவாகவே காணப்படுகிறது. டிஜிட்டல் யுகம் என்பதற்கேற்ப இலங்கை மக்களும் கணினி மயப்படுத்தப்பட்ட வாழ்க்கைக்குள் தங்களை உள்நுழைத்துக் கொண்டுள்ளனர். மக்கள் நேருக்கு நேரான உறவுகளை விடுத்து சமூக ஊடகங்களூடான வாழ்க்கைக்குள் வாழ்கின்றனர்(Mikami.et al, 2010). வலைத்தளங்களுள் பாரிய ஒரு பரப்பாக சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன. இலங்கையானது வலைத்தள பாவனையில் 74ஆவது இடத்தில் உள்ளது. அதாவது 2017இல் 6 மில்லியனுக்கும் அதிகமானோர் இணையத்தளங்களை பார்வையிடுகின்றனர். அதிலும் இலங்கையில் சமூக ஊடகங்களை 1.4 மில்லியன் மக்கள் பார்வையிடுகின்றனர் (http://www/digitalmarketer.lk/internet-usage-statistics-in-sri-lanka-2016update.html).

இன்று இலங்கையில் அதிகளவாகப் பயன்படுத்தப்படும் சமூக ஊடகங்களாக முகப்புத்தகம், ஸ்கைப், டுவிட்டர், யுடியுப், வட்ஸ்அப், வைபர் போன்றன காணப்படுகின்றன. இலங்கையில் டயலொக், மொபிடெல், எயார்டெல், எடிசலாட், ஹட்ச், டெலிகொம் என பல தொலைத்தொடர்பு நிறுவனங்களும் சமூக ஊடகங்களை மக்கள் பயன்படுத்த சிறப்பான சலுகைகளை வழங்கியுள்ளன. இலங்கை சனத்தொகையில் 11.5%ஆனோர் முகப்புத்தகத்தையே பார்வையிடுகின்றனர். அதாவது 2.4 மில்லியன் பேர் முகப்புத்தகத்தையும், 40 000 பேர் டுவிட்டரையும் பயன்படுத்துகின்றனர். முகப்புத்தகத்தை அதிகமாக 25-34 வயதிற்கிடையிலுள்ள 1,400,000 ஆண்களும் 720,000 பெண்களும் பயன்படுத்துவதாக தரவுகள் கூறுகின்றன. இதனை ''சமூக ஊடகங்கள் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையையும் தொடுகின்றது'' என்ற கருத்து தெளிவுபடுத்துகின்றது(Qualman,2009).


இந்தவகையில் ஆய்வுப் பிரதேசமான கல்லடியில் சமூக ஊடகங்களின் வியாபகத்தை அறியும் நோக்கில் தரம் 10, 11 மற்றும் 12ஆம் தர மாணவ, மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனால் தரம் 10,11,12ஐச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் அதிகமாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது ஆய்வின் மூலம் உறுதியாகின்றது.



ISBN 978-955-627-120-1

பிரயோகத் தன்மையான அனைத்து சமூக ஊடகங்களும் வாலிபப் பருவத்தினராலும் மற்றும் சிறுவர்களாலுமே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது (http://www.study.com//-postive-and-negative-of-social-media-essay). இவ்வகையில் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மொத்த 45 மாதிரிகளுள் 23 மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். இதனை வரைபு 5.1இன் மூலம் அறிய முடியும்.

*வரைபு 5.1 சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர்*




(கள ஆய்வுத்தரவு)

அத்தோடு தரம் 10, 11, 12ஐச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள் 16 பேர் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் ஆய்வாளரால் திரட்டப்பட்டுள்ளது. அவர்களுள் 6 ஆண்களும், 10 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இப் பெற்றோர்களுள் சிலர் சமூக ஊடகங்களைப் பார்வையிட அனுமதிக்கின்றனர். முகப்புத்தகம், ஸ்கைப் போன்றவை அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அநேகமாக கைத்தொலைபேசிகள், கணினிகளிலும் பார்வையிடுகின்றனர் என்றும் ஆய்வின் போது கண்டறியப்பட்டது. இவர்களது பிள்ளைகளால் அதிகமாக சமூக ஊடகங்களில் அரட்டை, நண்பர்களைச் சேர்த்தல், விளையாட்டு, காணொளிப் பதிவேற்றம், புகைப்படப் பதிவேற்றம் போன்றவையே செய்யப்படுகின்றது.


இத்தகைய சமூக ஊடகங்களால் உடல் ரீதியான, கல்விப் பாதிப்புகள், உளவியல் ரீதியான பாதிப்புகள் ஆபத்துகள் ஏற்படுகின்றன எனவும் 75% பெற்றோர்கள் கூறுகின்றனர். பிள்ளைகளை இரவு மற்றும் பிற்பகல் நேரங்களிலேயே அதிகளவு பெற்றோர்கள் பார்வையிட அனுமதிக்கின்றனர். சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் மாணவர்களின் கணக்குகளில் 5% பெற்றோர்களே நண்பராக உள்ளனர் எனவும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

பெற்றோர்களின் தரவுகளின் படி சமூக ஊடகங்களால் தேவையற்ற காதல் தொடர்புகள், துஷ்பிரயோகங்கள், பண்பாட்டுச் சீரழிவுகள் ஏற்படுகின்றது. இதனை பின்வரும் வரைபு 5.2 தெளிவுபடுத்துகின்றது.



ISBN 978-955-627-120-1

*வரைபு 5.2 சமூக ஊடகங்களின் தாக்கங்கள்*




(கள ஆய்வுத்தரவு)

ஆபாச திரைப்படங்கள் பார்வையிடப்படா வண்ணம் "Netnanny" போன்ற அம்சங்களும் பெற்றோர்களால் செயற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வலைத்தளங்களில் சொந்த புகைப்படங்களை பதிவேற்ற அனுமதிக்கவில்லை என்றும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. இவ்வாறு சமூக ஊடகங்களின் மாணவர்களின் பாவனை பற்றி பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு காணப்படுகின்றது என்பதும் கண்டறியப்பட்டது.

**5.1 சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்களின் கருத்துகள் பற்றிய பகுப்பாய்வு.**

ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையில் கற்பிக்கும் 42 ஆசிரியர்களுள் தரம் 10, 11, 12 கற்பிக்கும் ஆசிரியர்கள் 18 பேர் காணப்படுகின்றனர். அதில் 7 ஆசிரியர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு பேட்டிமுறை மூலம் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் கருத்துப்படி சமூக ஊடகங்களை பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவது மிகவும் தீமையான விடயமாகும். A என்ற உப அதிபரின் கருத்துப்படி,

***"சரியான வழிநடத்தலின்றி சமூக ஊடகங்களை மாணவர்கள் பாவிப்பது தீமையானது. அறிவு பூர்வமான விடயங்கள் பல நிறைந்திருக்கின்றன. இதனை மாணவர்கள் இரகசியமான முறையில் பார்வையிடுகின்றனர். தனிப்பட்ட முறையில் தீமையான விதத்தில் பயன்படுத்துகின்றனர்"*** எனக் கூறினார். அதுபோலவே, B என்ற விஞ்ஞான ஆசிரியரின் கருத்துப்படி,

***"பரீட்சை நாட்களில் பரீட்சை முடிந்ததும் நெட் கஃபேக்கு சென்று மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பார்வையிடுகின்றனர். இப்போது சென்றாலே அவர்களை பார்வையிட முடியும். சிறிய மாணவர்கள் விளையாடவே செல்கின்றனர். பின்பு ஆபாசப்படங்கள் மீது ஆசைப்பட்டு தீய வழிகளுக்குச் செல்கின்றனர். சாதாரண தரம், உயர்தரம் பெறுபேறுகள் குறைய இதுவே காரணமாகும்"*** எனக் கூறினார்.

இவ்வாறு நோக்குகையில் சமூக ஊடகங்களானது மாணவர்களுக்கு தீமையையே அளிக்கின்றது என்பதை ஆசிரியர்களின் கருத்துக்கள் மூலமாக கண்டறியக் கூடியதாக உள்ளது. அவ்வாறு C என்ற தமிழ் ஆசிரியையின் கருத்துப்படி,

***"இப்போது கைத்தொலைபேசிகளிலேயே இவற்றைப் பார்வையிட முடியும். இதனால் மாணவர்களிடையே பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. கெட்ட வழிக்கு செல்லுதல், புள்ளிகள் குறைவு, வாசிப்புத் திறன் அற்றநிலை போன்றன ஏற்படுகின்றன. பாடசாலை***



ISBN 978-955-627-120-1

***நேரங்களில் மட்டுமே மாணவர்கள் படிக்கின்றனர். ஏனைய நேரங்களில் இவ்வலைத்தளங்களையே பார்வையிடுகின்றனர்"*** என்றவாறு அமைந்தது.

மாணவர்கள் முறையற்ற விதங்களில் ஊடகங்களைப் பாவனை செய்வதை கண்டிப்பதோடு அவர்கள் அதன் மூலமாக தேவையற்ற விடயங்களிலேயே ஆர்வத்தை செலுத்துகின்றனர் என்பதை ஆசிரியர்களின் கருத்துகள் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது. D என்ற விவசாய ஆசிரியையின் கருத்துப்படி,

***"படிக்கும் பிள்ளைகளுக்கு பொருத்தமில்லை. எனது பிள்ளைகளும் பாவிக்கின்றனர். எனினும் ஒரே பாவிப்பதில்லை. இருந்தாலும் அது தீமை தான்"*** ஆகும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பார்வையிடுவது பொருத்தமற்ற விடயமாகவே தோன்றுகின்றது என கண்டறியக் கூடியதாக உள்ளது. E என்ற ஆங்கில ஆசிரியரின் கருத்தின் படி,

***"தீமைகள் நிறைந்தது என பலர் கூறினாலும் இருபக்கச் சார்பாகவும் அமைகின்றது. பிள்ளைகள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். மாணவர்கள் சமூக ஊடகங்களை அதிகளவு பயன்படுத்துகின்றனர். இது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காக அமைகிறது. பிள்ளைகள் பாவனை செய்யும் சமூகவலைத்தளங்களில் பெற்றோரும் நண்பர்களாக இருக்க வேண்டும்"*** என்று அமைந்தது.

சமூக ஊடகங்களானது மாணவர்களால் சரியான வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாக அமைந்தது. F என்ற தகவல் தொழில்நுட்ப ஆசிரியரின் கருத்துப்படி,

***"சமூக ஊடகங்கள் மிகவும் முக்கியமானவை. இருப்பினும் இன்று பாடசாலை நேரங்களில் மறைமுகமாக கைத்தொலைபேசிகளில் கூட பார்வையிடுகின்றனர். பெற்றோர்கள் நண்பர்களாக இருப்பதும், Netnanny போன்ற அம்சங்களை செயற்படுத்துவதும் தேவையற்ற வலைத்தள பாவனையை தடுக்கக் கூடிய வழிகளாகும். அடிக்கடி கணினியை கண்காணிக்கவும், பார்வையிடவும் வேண்டும்"*** என்று கூறினார்.

சமூக ஊடகங்களைப் பார்வையிடும் மாணவர்களை சரியாக கண்காணிப்பதன் மூலமாக சரியாக வழிநடத்த முடியும். அதுமட்டுமன்றி பாதுகாப்புடன் கூடிய இணையத்தை செயற்படுத்துவதும் மிக முக்கியமாகும். G என்ற அரசியல் ஆசிரியரின் கருத்துப்படி,

***"நமது கலாசாரத்தை ஒப்பிடுகையில் சீரழியும் சந்தர்ப்பங்கள் அதிகம். கல்விக்கென பயன்படுத்துதல் நல்லம். வெளிநாட்டு நண்பர்களை தொடர்பு கொள்ளல், கல்விப்பரிமாற்றம் போன்ற சேவைகளுக்கு நன்மையளிக்கின்றது. இந்தப்பாவனை அதிகமாக மாணவர்களிடத்தே அதிகமாகக் காணப்படுவதோடு, உடல், உள பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. முறையற்ற விதத்தில் மாணவர்கள் பயன்படுத்துவதால் தீயவழிக்குச் செல்கின்றனர்"*** எனக் கூறப்பட்டது.

எனவே ஆசிரியர்களின் கருத்துப்படி சமூக ஊடகங்கள் பல மாணவர்களால் மறைமுகமாக பயன்படுத்தப்படுகின்றது. அவர்கள் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்து அவை பாதகமாகவும் அமைகின்றன. அத்தோடு நன்மையளிக்கும் பல விடயங்களையும் மாணவர்கள் விடுத்து ஆபாசப் படங்கள், தீமையான விடயங்களையே அதிகமாகப் பார்வையிடுகின்றனர். அதிகமான சமூக ஊடகப் பாவனை சமூக உறவுகள், சமூக நல்வாழ்வு. நித்திரை மற்றும் கல்வி ரீதியான செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது(Pea,R, et al 2012). இதுவே துஷ்பிரயோகங்கள், எதிர்மறை விடயங்களுக்கும் தூண்டப்படக் காரணமாகும் என்பது ஆசிரியர்களின் தரவுகளின் படி ஆய்வாளரால் கண்டறியப்பட்டது.



ISBN 978-955-627-120-1

**5.2 பாடசாலை மாணவர்களின் சமூக ஊடகங்களின் பாவனை பற்றிய கல்லடி வாழ் பிரதேசவாசிகளின் தரவுகள் பற்றி பகுப்பாய்வு.**

சமூக ஊடகங்களும், மாணவர்களும் என்ற தலைப்பின் கீழாக பிரதேச வாசிகளில் 8 பேர் தெரிவு செய்யப்பட்டு பேட்டிமுறை மூலம் தரவுகள் ஆய்வாளரால் திரட்டப்பட்டுள்ளது. இதன்படி சமூக ஊடகங்கள் அதிகமாக கல்லடியைச் சேர்ந்த மாணவ,மாணவிகளால் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது பிரதேசவாசிகளின் கருத்துக்களின் படி தெளிவாகின்றது. P என்ற ( வயது 32) இல்லத்தரசியின் கருத்துப்படி,

***"படிக்கின்ற பிள்ளைகளுக்கு நன்மை இல்லை. அது தேவையே இல்லை எனவும் அதனைப் பாவிப்பதால் கெட்டவழிகளுக்குச் செல்கின்றனர்"*** எனக் கூறப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் அதிகமாகப் பாவனை செய்வதால் பல தீமைகளுக்கு உட்படுகின்றனர். அத்தோடு Q என்ற (வயது 52) ஆசிரியையின் கருத்துப்படி,

***"இதில் 50% நன்மையும், 50% தீமையும் காணப்படுகின்றது. விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப புதிய விடயங்களை அறியவும் ,பழைய அம்சங்களிலிருந்து நீங்கவும் உதவுகிறது. என்னும் பாடசாலை மாணவர்கள் நன்மையான விடயங்களை விடுத்து கூடாத விடயங்களையே அதிகம் செய்கின்றனர். 75% விலகல் நடத்தைகளுக்கும் இதுவே காரணமாகும்"*** என்றார்.

அனைவரையும் பொறுத்த வரையில் சமூக ஊடகங்கள் மாணவர்களால் பயன்படுத்துப்படுவது தேவையற்ற விடயங்களை அவர்கள் வாழ்வில் புகுத்தி விடுகின்றது. அண்மைய கால நாடளாவிய விளம்பரங்களும் இதனை பறைசாற்றி நிற்கின்றது. R என்ற (வயது 41) வியாபாரியின் கருத்துப்படி,

***"சமூக ஊடகங்கள் நன்மையானதல்ல. கண்கோளாறுகள் ஏற்படவும் இதுவே காரணமாக அமைகின்றது. எனது பிள்ளைகளை 18 வயதிற்கு மேலேயே பார்வையிட அனுமதிப்பேன்"*** எனப்பட்டது.

மாணவர்கள் உடல் ரீதியான பிரச்சினைகளுள் கண் பாதிப்புப் பிரச்சினைகளை அதிகம் தங்களுள் உள்ளீர்த்துக் கொள்ள சமூக ஊடகங்களே காரணமாகவும் அமைகின்றது எனவும் அறிந்து கொள்ள முடியும். S என்ற (வயது 47) இல்லத்தரசியின் கருத்துப்படி,

***"இன்று பிள்ளைகளின் படிப்பு கெட ஊக்குவிப்பாக சமூக ஊடகங்களே அமைகின்றது. ஆண்களே அதிகமாக பயன்படுத்துகின்றனர். கெட்டவழிகளுக்கும், காதல் தொடர்புகளுக்கும் இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது. பிள்ளைகளுக்கு கையடக்கத் தொலைபேசி,கணினி போன்றவற்றை கொடுக்கவே கூடாது"*** என அமைந்தது.

இதன் மூலம் குறிப்பாக மாணவர்கள் அதிகமாக கையடக்கத் தொலைபேசிகள், கணினிகள் பாவனை செய்வது அவர்களுக்கு தீமையளிக்கும் விடயமாகவே அமைகின்றது. T என்ற (வயது 54) மீன்பிடித்தொழிலாளியின் கருத்து,

***"பாடசாலை மாணவர்களுக்கு எதற்கு சமூக ஊடகங்கள், அவர்களால் சமூக ஊடகங்களில் ஆபாசப் படங்களே பார்வைிடப்படுகின்றது. அது தேவையில்லாத விடயம்"*** என்று அமைந்தது.

சமூக ஊடகங்கள் நன்மையான விடயங்களை வாழ்க்கைக்கு அளிக்கும் விடயமாகும். எனினும் அவை மாணவர்களால் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவது அவர்களின்



ISBN 978-955-627-120-1

வாழ்க்கைப் பாதிப்புகளுக்கு அடிப்படையான விடயமாக அமைகின்றது. U என்ற (வயது 36) க.்.பே உரிமையாளரின் கருத்து,

***"இங்கு அதிகளவான மாணவர்கள் வருகின்றனர். அவர்கள் விளையாட்டுகளிலேயே ஈடுபடுகின்றனர். எனினும் பாடசாலை மாணவர்களை நான் பாடசாலை நேரங்களில் அனுமதிப்பதில்லை. சில மாணவர்களால் தீய விடயங்களும் பார்வையிடப்படுகின்றது. எனினும் நான் அதைக் கண்காணித்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். இங்கு மட்டும் தான் சமூக ஊடகங்களை அவர்கள் பார்வையிட வேண்டும் என்று இல்லை. அத்தோடு தற்போது கையடக்கத் தொலைபேசிகளிலும் பார்வையிடுகின்றனர்"*** என அமைந்தது.

சமூக ஊடகங்களை மாணவர்கள் பயன்படுத்தினாலும் அவர்களின் உண்மையான புகைப்படங்களையும், தரவுகளையும் தரவேற்றம் செய்வது கூடாத விடயமாகும் என்பதையும் பிரதேச வாசிகளின் கருத்துக்களூடாகவும் அறிந்து கொள்ளலாம். V என்ற (வயது 44) உப தபால் அதிபரின் கருத்துப்படி,

***"மாணவர்களுக்கு சீரழிவை ஏற்படுத்துகின்றது. இன்று பல பிரச்சினைகள் வர இதுவே காரணமாகும். இரகசியமான பாவனை முறையால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது. வேலையுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் அதிகமாக உபயோகிக்கின்றனர். பயன்படுத்தினாலும் புகைப்படங்களை பதிவேற்றம் செய்யாமல் இருப்பது நல்லது"*** ஆகும்.

இன்றைய காலகட்டங்களில் சமூக வலைத்தளங்களின் நன்மையான விடயங்களை விடுத்து தீமையான விடயங்களிலேயே மாணவர்கள் ஈடுபடுகின்றனர். இதற்கே அறியாமை காரணமாக முக்கியத்துவம் வழங்குகின்றனர். W என்ற (வயது 36) இல்லத்தரசியின் கருத்துப்படி,

***"பிள்ளைகள் பாவிப்பதைப் பொறுத்து நன்மைகள், தீமைகள் அமைகின்றது. நாம் பார்க்கும் போது நல்லவற்றைப் பார்வையிடுவது போல பாவனை செய்வர், நாம் இல்லாத போது தீயவற்றை பார்வையிடுகின்றனர்"*** என்று அமைந்தது.

ஆகவே இவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தரவுகளின் படி சமூக ஊடகங்களை மாணவர்கள் பயன்படுத்துவதால் அவர்களுக்கு நன்மைகளை விட தீமைகளே அதிகமாகும் என்பது கண்டறியப்பட்டது. எனினும் அதில் இருக்கும் பல விடயங்களை தீய வழியில் பயன்படுத்த அதுசார் அறிவற்ற தன்மையும், அனுபவமின்மையுமே காரணமாகும் எனவும் மாணவர்களுக்கு அது தேவையற்ற விடயமே என்பதும் பிரதேசவாசிகளின் கருத்துக்களின் மூலம் புலனாகின்றது.

## 6. முடிவுரை

சமூக ஊடகங்களை பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவது என்பது இன்று சாதாரண விடயமாகி உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ளது. இலங்கையும் கூட அதற்கு விதிவிலக்கல்ல. ஏனெனில் இலங்கையில் பரந்தளவாக பாடசாலை மாணவர்களால் சமூக ஊடகங்களானது பயன்படுத்தப்படுகின்றது. எனினும் இன்றைய சிறுவர்கள் நாளைய நாட்டின் தலைவர்கள் என்பதற்கேற்ற வகையில் சரியான முறையில் வழிநடத்துதல் அவசியமாகும்.

அதுபோலவே சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் மாணவர்களின் பெற்றோர்களின் கருத்துப்படி மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது உறுதியாகின்றது. அவர்களின் அனுமதியோடு பிள்ளைகள் சமூக ஊடகங்களைப் பார்வையிடுகின்றனர்



ISBN 978-955-627-120-1

எனவும் கண்டறியப்பட்டது. எனினும் சில பெற்றோர்கள் நண்பர்களின் பட்டியலில் தாங்களும் இருப்பதாலும், அடிக்கடி மேற்கொள்ளப்படும் கண்காணிப்புகளின் மூலமும் சமூக ஊடகங்கள் மூலம் கெட்ட வழியில் செல்லாமல் தடுக்க முடியும் என்பது பெற்றோர்களின் தரவுகளின் பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

பிரதேசவாசிகளின் கருத்துகளின் பகுப்பாய்வுப் படி மாணவர்கள் சமூக ஊடகங்களை உபயோகிப்பது தேவையற்ற ஒன்றே எனக் கூறுகின்றனர். நல்ல விடயங்களை பெற பயன்படுத்துவதை விடுத்து மாணவர்கள் பெற்றோர்களற்ற சந்தர்ப்பங்களில் ஆபாசமான, வயதுக்கு மீறிய செயல்களில் ஈடுபடுகின்றனர் எனவும் கண்டறியப்பட்டது. சமூக ஊடகங்களை உபயோகிக்கும் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது அதிக கவனஞ் செலுத்த வேண்டும் என்பதும் ஆய்வின் மூலமாக புலனாகிறது.

ஆசிரியர்களின் கருத்துப்படியும் மாணவர்கள் தேவையற்ற விதங்களிலேயே சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். அதில் பல நன்மைகள் காணப்பட்டாலும் அவர்கள் அவ்வாறு உபயோகிப்பது எனவும் கூறுகின்றனர். எனவே கல்வியறிவில் மந்த கதி, ஞாபக மறதி, தனிமைப்படுத்தப்படுதல், துஷ்பிரயோகங்கள், பண்பாட்டுச்சீரழிவுகள், தற்கொலை, தவறான காதல் தொடர்புகள் போன்றவற்றுக்கும் அவை வழிகோலுகின்றன என அவர்களின் தரவுகள் மூலமாக தெளிவாகின்றது. மாணவர்கள் தவிர்ந்த ஏனையோர்களின் கருத்துப்படி சமூக ஊடகங்களை பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவது தீய பல விளைவுகளுக்கு காரணமாக அமைவது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

அந்தவகையில் ''சமூக ஊடகங்களும், மாணவர்களும்'' எனும் தலைப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் சமூக ஊடகங்கள் தரம் 10, 11, 12 பாடசாலை மாணவர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளதை இனங்காண முடிந்தது. எனவே இதன் மூலம் ஆய்வுப் பிரதேசமான கல்லடியில் சமூக ஊடகங்களின் பாவனையானது பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படுவது ஆய்வின் மூலமாகப் புலனாகின்றது.

**7. உசாத்துணை நூல்கள்**


அபிராமி.க. (2001). தகவல் தொழில்நுட்பம். சென்னை: தமிழ்ப்புத்தகாலயம்.

கோகிலன்.ஏ.கே. (2003). தகவல் தொழில்நுட்பம். திருகோணமலை: சிவகோவகி வெளியீட்டகம்.

Bucy.P.Erick. (2002). Living in the Information age. Australia: Wads worth

Babbie Earl. (2004). The practices of social research. Australia: wadsworth.

David Mathew. Sutton.D.Carole. (2004). Social research. London: SAGE Publications.

Giddens Anthony. (2006). Sociology 5th Edition. Cambridge: Simon Griffths Polite.

Pea.R. at el . (2012). Developmental Psychology, Media multitasking.

Mikami.A.Y. et al. Adolescent Peer Relationshis and Behavior Poblems Predict Young Adults ommunication on Social Networing Websites.Develpmental Psychology.

www.makeuseof.com/tag/positive-impact-social-networking-sites-opinion/

http://www.study.com//-postive-and-negative-of-social-media-essay)




ISBN 978-955-627-120-1

http://www/digitalmarketer.lk/internet-usage-statistics-in-sri-lanka-2016update.html



ISBN 978-955-627-120-1